செய்தி வெளியீட்டு எண்:557 நாள்:28.8.2009

**போலி குடும்ப அட்டைகளை களைய வீடுவீடாக சென்று மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் ஆய்வு**

போலி குடும்ப அட்டை முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்காக அரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

முதற்கட்டமாக கோயம்புத்தூர், திருப்பூர், திருச்சி மாவட்டங்களிலும், சென்னை அண்ணாநகர் மண்டலத்திலும் மேற்கொள்ளப்பட்ட இப்பணி நிறைவு பெற்றுள்ளது.

இரண்டாம் கட்டமாக நாகப்பட்டினம், தூத்துக்குடி, தேனி, வேலூர், சேலம், கிருஷ்ணகிரி, கடலூர், தருமபுரி, கரூர் மற்றும் நாமக்கல் ஆகிய 10 மாவட்டங்களில் கணக்கெடுக்கும் பணி நிறைவு பெற்று மேல்முறையீட்டு மனுக்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

மூன்றாம் கட்டமாக திருவாரூர், தஞ்சாவூர், இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, புதுக்கோட்டை, விழுப்புரம், திருவண்ணாமலை, பெரம்பலூர், திண்டுக்கல், ஈரோடு, விருதுநகர், அரியலூர் மற்றும் திருப்பூரில் (காங்கேயம் மற்றும் தாராபுரம் வட்டங்கள்) ஆகிய 14 மாவட்டங்களில் 01.08.2009 முதல் நடைபெற்று வருகிறது.

இதர மாவட்டங்களில் 01.09.2009 அன்று தலத்தணிக்கைப் பணி துவக்கப்பட உள்ளது. திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 01.08.2009 முதல் தலத்தணிக்கை பணி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

தலத்தணிக்கை பணியாளர்களால் கணக்கெடுப்பு சரியாக மேற்கொள்ளப்படுகிறதா என்பதனை ஆய்வு செய்ய மண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் இன்று (28.08.2009) காலை 11.30 அளவில் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள போளூர் நகரப் பகுதியிலுள்ள தியாகித் தெரு, கன்னிகா பரமேஸ்வரி தெரு, அங்காளப் பரமேஸ்வரி தெரு ஆகிய தெருக்களிலும், புதுமல்லவாடி கிராமத்திலும், வீடு வீடாகச் சென்று தலத் தணிக்கை பணியாளர்கள் மேற்கொண்ட பணிகளை ஆய்வு செய்து, தலத் தணிக்கை பணியாளர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கினார்கள். அடுத்து விழுப்புரம் மாவட்டம், கண்டாட்சிபுரம் கிராமத்தில் உள்ள நியாயவிலைக் கடைக்கு சென்று கடை சரியான முறையில் இயங்குகிறதா, அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் பொது மக்களுக்கு முறையாக வழங்கப்படுகின்றதா என்பதை கேட்டறிந்தார்கள். மேலும், விழுப்புரம் மாவட்டத்தில் கண்டாட்சிபுரம் மற்றும் கிடார் ஆகிய இடங்களில் தலத் தணிக்கை அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் தலத் தணிக்கைப் பணிகளை ஆய்வு செய்தார்கள். ஆய்வுக்கு செல்லும் போது அத்தியாவசியப் பொருட்களான அரிசி, சர்க்கரை, மண்ணெண்னை, துவரம்பருப்பு போன்ற அனைத்துப் பொருட்களும் நியாயவிலைக் கடைகளின் மூலம் முறையாக பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறதா என்பதை கேட்டறிந்தார்கள். மல்லவாடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கம் நடத்தும் நியாயவிலைக் கடையினை ஆய்வு செய்து அக்கடையின் மூலம் பொது மக்களுக்கு அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் முறையாக வழங்கப்படுகிறதா என்பதையும் கேட்டறிந்தார்கள்.

வீடு வீடாகச் சென்று மேற்கொண்ட ஆய்வுப் பணியைத் தொடர்ந்து திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மதியம் 3.00 மணிக்கும், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாலை 6.00 மணிக்கும் மேல் தணிக்கை அலுவலர்கள் செயல்படுத்தப்பட வேண்டிய பணிகள் குறித்து அறிவுரை வழங்கினார்கள். 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆய்வின்படி தமிழ்நாட்டின் மக்கள்தொகை 6,65,66,0000 மற்றும் குடும்ப அட்டை தகவல் தொகுப்பு விவரத்தின்படி குடும்ப அட்டைகளில் உறுப்பினராக உள்ள நபர்கள் 8 கோடி. இதனை ஒப்பிட்டுப் பார்த்தால் கூடுதலாக குடும்ப அட்டைகளில் குறைந்தபட்சம் இடம் பெற்றுள்ள நபர்கள் சுமார் 1.4 கோடி உள்ளது என்றும்,

திருவண்ணாமலை மாவட்டத்தில் இதுவரை 55 சதவீதத் தலத் தணிக்கைப் பணிகள் நிறைவு பெற்றுள்ளது என்றும், இப்பணியை மேற்கொள்ள தலத்தணிக்கை அலுவலர்களுக்கு உரிய பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. எல்காட் நிறுவனத்தில் கணினி பதிவின் அடிப்படையில் விவரங்கள் ஆய்வுக்காக வழங்கப்பட்டுள்ளது. வெளியூரிலிருந்து வந்தவர்கள் குறித்த விவரங்கள் தலத் தணிக்கை படிவங்களில் இருக்காது. வெளியூர்களிலிருந்து வந்து வசிப்பவர்களின் விவரங்களை தனியாக வழங்கப்பட்டுள்ள தலத்தணிக்கை படிவங்களில் பூர்த்தி செய்து வழங்க வேண்டும். கிராம நிர்வாக அலுவலர்கள், அவர்களுடைய உதவியாளர்கள் அளிக்கும் விவரங்களின் அடிப்படையில் தலத்தணிக்கை படிங்களை பூர்த்தி செய்யக் கூடாது. அனைத்து தலத் தணிக்கை அலுவலர்களம் வீடு வீடாக சென்று தலத் தணிக்கை செய்ய வேண்டும். படிவங்களை பென்சிலால் பூர்த்திசெய்யக் கூடாது. வீட்டை காலி செய்து விட்டு போகும்போது அவர்களுடைய குடும்ப அட்டைகளை வீட்டு உரிமையளரிடம் ஒப்படைத்து செல்கின்றனர். இதனை தலத் தணிக்கை ஆய்வு அலுவலர்கள் ஆய்வு செய்ய வேண்டும். தலத் தணிக்கை படிவங்களை பெறும்போது உரிய ஒப்புதல் பெற வேண்டும். தணிக்கை நிறைவு பெற்றவுடன் மீதமுள்ள படிவங்களை ஒப்புதல் பெற்றுக்கொண்டு ஒப்படைக்க வேண்டும். திரும்ப ஒப்படைக்கும் தலத் தணிக்கை படிவங்களை பயன்படுத்தி தவறான குடும்ப அட்டை வழங்கப்படாமல் அலுவலர்கள் பாதுகாக்க வேண்டும். இதனை மேல் தணிக்கை அலுவலர்கள் ஆய்வு செய்ய வேண்டும். கூட்டு குடும்பங்களில் இரண்டு எரிவாயு இணைப்பு பெற்றிருந்தால், இரண்டு குடும்ப அட்டைகள் இருக்க வாய்ப்புள்ளது. இது குறித்தும் தக்க ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும். தலத் தணிக்கை அலுவலர்கள் இப்பணியில் தங்களை முழுமையாக எந்தவித நிர்பந்தத்திற்கும் ஆளாகமலும், போலி குடும்ப அட்டை என கண்டறியும் படிவங்களை உரிய நடவடிக்கைக்காக உடன் சமர்ப்பிக்க வேண்டும். போலி குடும்ப அட்டைகளை கணக்கெடுக்கும் பணியில் தணிக்கை அலுவலர் வற்புறுத்தப்பட்டால் உடன் உயர் அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டு உடன் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள். போலி குடும்ப அட்டைகளையும் பணியில் தலத் தணிக்கை அலுவலர்கள் எந்தவித நிர்பந்தத்திற்கும் ஆளாகாமல் போலி குடும்ப அட்டை எனக் கண்டறியும் படிவங்களின் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

மண்டல அலுவலர்கள் வாரந்தோறும் தலத் தணிக்கை அலுவலர்களுடன் கூட்டம் நடத்தி அவர்களுக்கு ஏற்படும் சந்தேகங்கள் மற்றும் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். தலத் தணிக்கை படிவங்கள் இருந்தும், அத்தகைய குடும்பங்கள் வசிக்காமல் இருக்கலாம். தலக் தணிக்கையின் போது அங்கு வசிக்கும் குடும்பத்திற்கான படிவம் கைவசம் இல்லை எனில் அத்தகைய குடும்ப அட்டையின் பட்டியல் தயாரித்து தகுதியான குடும்பங்களை காலிப் படிவங்கள் மூலம் விவரங்களை பூர்த்தி செய்ய வேண்டும். இறந்தவர் மற்றும் வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்த குடும்ப நபர்களின் பெயர்கள் நீக்கப்பட வேண்டும். தணிக்கைப் படிவங்களில் அனைத்து கலங்களையும், விவரங்களையும் முழுமையாக பூர்த்தி செய்யவேண்டும், தகுதியான குடும்பங்கள் ஒன்று கூட விடப்படாமல் தணிக்கை அலுவலர்கள் கணக்கெடுக்கவேண்டும். தலத்தணிக்கை அலுவலர்கள் இப்பணியை மிக கவனமாக மேற்கொள்ளவேண்டும் அனைத்து தணிகைப்பணிகளையும் 7.09.2009க்குள் முடிக்க வேண்டும் என்று மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இப்பயிற்சிக் கூட்டத்தில் திரு. க. சண்முகம், இ.ஆ.ப. முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, திரு. கா. ராஜாராமன், இ.ஆ.ப., ஆணையாளர், உணவு பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, ஆகியோர் பங்கேற்றார்கள்.

******************

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை.